இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஆண்டவர் தாம் கூறியிருந்தபடி சாராவைக் கண்ணோக்கினார். ஆண்டவர் தம் வாக்குறுதிக்கேற்ப சாராவுக்குச் செய்தருளினார். கடவுள் வாக்களித்தபடி, குறிப்பிட்ட அதே காலத்தில் சாரா கருத்தாங்கி, ஆபிரகாமுக்கு அவரது முதிர்ந்த வயதில் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். ஆபிரகாம் தமக்குப் பிறந்த, சாரா தமக்குப் பெற்றுக்கொடுத்த, மகனுக்கு 'ஈசாக்கு' என்று பெயரிட்டார்.
தொ.நூ. 21:1-3

# அக்கறை காட்டும் பண்பாட்டில் வளர்ச்சியடையாமல் உலக அமைதிக்கு வழிவகுக்க இயலாது

## திருத்தந்தையின் 54-வது உலக அமைதி நாள் செய்தி

2021-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி, புத்தாண்டு நாளன்று, சிறப்பிக்கப்படும் 54-வது உலக அமைதி நாளுக்கென திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கியச் சிறப்புச் செய்தியில் புயல் சூழ்ந்துள்ள கடலில் ஒரே படகில் பயணிக்கும் நாம் அனைவரும், பேணிக்காக்கும் அல்லது அக்கறை காட்டும் பண்பாட்டில் வளர்ச்சியடையாமல், உலக அமைதிக்கு வழிவகுக்க இயலாது எற்று வலியுறுத்துகிறார் திருத்தந்தை பிரான்சிஸ்

### அமைதிக்கு வழிவகுக்கும் பாதையாக அக்கறை காட்டும் பண்பாடு"

"அமைதிக்கு வழிவகுக்கும் பாதையாக, அக்கறை காட்டும் பண்பாடு" என்ற தலைப்பில் திருத்தந்தை வெளியிட்டுள்ள இச்செய்தியானது எட்டு கருத்துக்களைக் கொண்டுள்ளது.

இச்செய்தியின் அறிமுகப் பகுதியில், உலகத்தலைவர்களுக்கும், பன்னாட்டு நிறுவனங்களின் தலைவர்களுக்கும், ஆன்மீகத் தலைவர்களுக்கும், சமய நம்பிக்கை கொண்டோர் மற்றும் நல்மனம் கொண்டோர் அனைவருக்கும், வருகின்ற ஆண்டு அமைதியின் ஆண்டாக அமைய தான் வாழ்த்துவதாகக் கூறியுள்ளார்.

### I. கோவிட்-19 நெருக்கடியால் உருவான இழப்புகள்

2020-ஆம் ஆண்டு, கோவிட்-19 உருவாக்கிய நெருக்கடியால், நெருங்கிய உறவுகளை இழந்தோர், வேலைகளை இழந்தோர் அனைவரையும் தான் எண்ணிப்பார்ப்பதாகக் கூறிய திருத்தந்தை, இந்தக் கொள்ளைநோய் காலத்தில் பணியாற்றிய நலவாழ்வுப் பணியாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள், ஆன்மீகப் பணியாளர்கள் அனைவரும் தமது நினைவில் உள்ளனர் என்றும் இந்தக் கொள்ளை நோயைக் கட்டுப்படுத்தும் தடுப்பூசிகள், வழங்கப்படும் வேளையில், குறிப்பாக, அவை, வறியோரையும், உடல்நலத்தில் மிகவும் நலிந்தோரையும் அடைவதை, அரசுத்தலைவர்கள் உறுதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

இத்தகைய ஒரு சூழலில், நாம் ஒருவர் ஒருவரையும், இந்த படைப்பின் மீதும் அக்கறை காட்டும் கடமை உள்ளது என்பதால், இந்த ஆண்டுக்குரிய உலக அமைதிச் செய்தியை, ""அமைதிக்கு வழிவகுக்கும் பாதையாக, அக்கறை காட்டும் பண்பாடு" என்ற மையக்கருத்துடன் வெளியிடுவதாக திருத்தந்தை கூறியுள்ளார். அக்கறை காட்டு அழைப்பிற்கு ஊற்றாக விளங்கும் படைக்கும் இறைவனோடும், இயற்கையோடும், ஏனைய மனிதர்களோடும் தொடர்புள்ள வகையில் மனிதர்கள் உரு வாக்கப்பட்டனர்.

### 2. (அ) அக்கறை காட்டும் அழைப்பிற்கு ஊற்றாக விளங்கும் இறைவன்

கடவுளை, படைப்பவராக மட்டுமல்ல, படைப்பைக் காப்பவராகவும் நமது புனித நூல்கள் கூறுகின்றன. ஆகவே, கடவுளின் திருவுளத்தை மண்ணகத்தின் நிறைவேற்றுப் பொருட்டு நாம் அக்கறை காட்டும் பண்பாட்டை பொற்றி வளர்க்க வேண்டும். அதற்கான அனைத்து ஆற்றலையும் ஊக்கத்தையும் கடவுள் நமக்கு அளிக்கிறார். அவரே நமது ஊற்றாக உள்ளார்.



### 3.(ஆ) அக்கறை காட்டுவதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் 'படைக்கும் இறைவன்'

படைப்பையும், ஏனைய மனிதர்களையும் காப்பதற்கென்று, ஒய்வு நாள் விதிகள், யூபிலி ஆண்டில் கடன்கள் இரத்து, அன்னியர், கைம்பெண், ஆகியோருக்கு நீதி போன்ற கட்டளைகளை இறைவன் வழங்கினார்

இத்தகைய பண்பை நாம் சமூகத்தில் விதைத்து பேணி காக்க வேண்டும்.

### 4.பேணிக்காக்கும் பண்பாட்டில் இயேசு

இயேசு, தன் பணி வாழ்வில், படைப்பின் மீதும், அயலவர் மீதும் அக்கறை கொண்டிருந்ததைப் போலவே, அவரது வழியைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் பேணிக்காக்கும் பண்பாட்டில் வளர்வதற்கு அழைப்பு பெற்றுள்ளனர்.

### 5. திருஅவையின் சமுதாயக் கோட்பாட்டின் கொள்கைகள்

ஒவ்வொரு தனி மனிதரின் மாண்பை நிலைநாட்டுதல். பொதுவான நலனில் அக்கறை கொண்டிருத்தல் அனைவரோடும் ஒருங்கிணைந்து அக்கறை காட்டும் முயற்சி களை மேற்கொள்ளுதல் வழி படைப்பை பாதுகாத்தல்.

### 6. மனிதர்களை மையப்படுத்திய ஓர் எதிர்காலத்தை உருவாக்குதல்

தூக்கியெறியும் கலாச்சாரமும், ஏற்றத் தாழ்வுகளும் பெருகிவரும் இன்றையச் சூழலில், மனிதர்களை மையப்படுத்திய ஓர் எதிர்காலத்தை உருவாக்க அரசுத்தலைவர் முன்வருதல்.

### 7. அக்கறை காட்டும் பண்பாட்டை வளர்க்கும் கல்வி

அக்கறை காட்டும் பண்பாட்டை வளர்க்க, கல்வி தலைசிறந்த ஒரு கருவி என்பதை, தன் ஏழாவது கருத்தாக வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குடும்பம், கல்விக்கூடங்கள், சமுதாயம், மதம் என்ற அனைத்து தளங்களிலும் இளையோருக்கு அக்கறை காட்டும் பண்பாடு கற்பிக்கப்பட வேண்டும்.

### 8. புயல் சூழ்ந்துள்ள கடலில் நாம் அனைவரும் ஒரு படகில் பயணிக்கிறோம்

மேற்கண்ட கருத்தை தன் இறுதிக் கருத்தாக வெளியிட்டுள்ள திருத்தந்தை, பேணிக்காக்கும் பண்பாட்டில் அல்லது அக்கறை காட்டும் வளர்ச்சியடை யாமல், உலக அமைதியை நாம் பெறஇயலாது என்பதை, தன் 54-வது உலக அமைதி நாளின் செய்தியில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

### புனித யோசேப்பு ஆண்டுக்கான செபம்

மீட்பரின் பொறுப்பாளரே! புனித
கன்னி மரியாவின் துணையாளரே,
வாழ்க!

கடவுள் தமது ஒரே திருமகனை
உம்மிடமே ஒப்படைத்தார்;
உம்மிடமே கன்னி மரியா தமது முழு
நம்பிக்கையையும் கொண்டிருந்தார்.
உம்முடனே கிறிஸ்து மனிதரானார்.

பேற்பெற்ற புனித யோசேப்புவே!
எங்களுக்கும் உம்மையே ஒரு
தந்தையாகக் காட்டி வாழ்வின்
பாதையில் எங்களை வழிநடத்தும்.
அருள். இரக்கம், துணிவு
ஆகியவற்றை நாங்கள் கடைபிடித்து
வாழும் வரத்தைப் பெற்றுத்தாரும்.
அனைத்துத் தீமைகளிலிருந்தும்
எங்களைப் பாதுகாத்தருளும்.
ஆமென்.

# பீடோரில் கிறிஸ்மஸ் முன்னிட்டு பரிசுப் பொருள்கள் அன்பளிப்பு

**பிடோர்:** இங்குள்ள புனித யோசேப்பு பங்கைச் சேர்ந்த சுமார் 48 பங்கு மக்கள், 2020 கிறிஸ்மஸ் பெருநாளை முன்னிட்டு பரிசுப் பொருள்களைப் பெற்று மகிழ்ச்சி அடைந்தனர்.

மேலும், அந்நிகழ்வின் போது அந்த சிற்றாலத்தின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வரும் அருள்தந்தை மைக்கல்தாஸ் அவர்களும் அச்சிற்றாலயத்தின் நிர்வாகக் குழு தலைவரும்



இந்நிழ்வையொட்டிய ஓர் எளிய விளக்கக்காட்சி 2020 டிசம்பர் 19 அன்று மாலை 5 மணி திருப்பலிக்கு முன் காண்பிக்கப்பட்டது. இரண்டாம் கல்வி அமைச்சராக இருக்கும் டத்தோ 'டாக்டர் மஹா ஹாங் சீன், வரிசையில் நின்ற ஒவ்வொரு பெறுநருக்கும் பரிசு மற்றும் உதவிப் பொருள்களை வழங்கினார்.

உடனிருந்தனர். மலேசிய சீனர் சங்கத்தின் துணைத் தலைவருமான டத்தோ 'டாக்டர் மஹா ஹாங் சீன் அதன் பின்னர் அருள் தந்தையோடும் சிற்றால மக்களோடும் கலந்துரையாடிய பின் விடைப்பெற்றுச் சென்றார்.

செய்தி - பெனர்ட் அந்தோணி

## புத்தாண்டு வாழ்த்தும் விடுமுறையும்

பிறக்கவுள்ள 2021-ஆம் ஆண்டு அனைவருக்கும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும், கோவிட்-19-ன் அச்சத்திலிருந்து முழு விடுதலையும் அளிக்கும் ஆண்டாகவும், புனித யோசேப்பின் சிறப்பு பரிந்துரையாளும் பாதுகாப்பாலும் குடும்பங்கள் சீர்பெற்று மகிழ்வுறும் ஆண்டாகவும் அமைந்திட வாழ்த்துகிறோம்.

**-இறைத்தூதன் ஆசிரியர் குழு**

**அடுத்த ஞாயிறன்று தெ ஹெரால்டு வெளிவராது.**

## தூய்மைமிக்க கிறிஸ்மஸ் கொண்டாட திருத்தந்தை அழைப்பு

முதல் கிறிஸ்மஸ் நாளன்று அன்னை மரியா, யோசேப்பு மற்றும் குழந்தை இயேசு ஆகியோர் மலர் கொத்துக்களையும், அலங்காரங்களையும் கொண்டு இந்நாளைக் கொண்டாடவில்லை.

இதனைக் கருத்தில் கொள்வோம். கிறிஸ்மஸ் தமது தூய வாழ்வுக்கான

ஓர் அழைப்பு.

**-திருத்தந்தை பிரான்சிஸ்**

# வத்திக்கானிலிருந்து சில செய்தித்துளிகள்

**1. ஈராக்கில் கிறிஸ்மஸ் நாள் தேசிய விடுமுறை**

கடந்த காலங்களில், கிறிஸ்மஸ் பெருவிழா நாளன்று, கிறிஸ்தவர்களுக்கு மட்டும் விடுமுறை அளித்து வந்த ஈராக் அரசு, இவ்வாண்டு முதல்,அந்நாளை நாட்டு மக்கள் எல்லாருக்கும் விடுமுறை நாளாக அறிவித்துள்ளது

**2. அணு ஆயுதங்களற்ற உலகம் - வத்திக்கான் கருத்தரங்கு**

அணு ஆயுத ஒழிப்பை மையப்படுத்தி, 2017-ஆம் ஆண்டு வத்திக்கானில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், "அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது மட்டுமல்ல, அணு ஆயுதங்களை வைத்திருப்பதும் நன்னெறிக்குப் புறம்பானது" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறிய கருத்தை, மீண்டும் ஒருமுறை வலியுறுத்தும் நோக்கத்தில் இந்த இணையதள கருத்தரங்கு நடைபெற்றது.

**3. விசுவாசிகளின் வாழ்வில் இறைவார்த்தை**

2021-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் தேதி "முதல் இறைவார்த்தை "ஞாயிறு" சிறப்பிக்கப்படுவதையொட்டி, விசுவாசிகளின் வாழ்வில் இறைவார்த்தையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஏடு ஒன்றை, திருவழிபாடு மற்றும் வத்திக்கானின் அருளடையாளங்கள் பேராயம், டிசம்பர் 19, இச்சனிக்கிழமையன்று வெளியிட்டுள்ளது.

ஆண்டின் பொதுக்காலம் மூன்றாம் "ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் இறைவார்த்தை "ஞாயிறன்று விசுவாசிகள், சில திருஅவை ஏடுகளை, குறிப்பாக, திருப்பலி வாசக நூலை மீண்டும் மீண்டும் ஆழ்ந்து படிப்பதற்கு நல்லதொரு வாய்ப்பாக அது அமைந்துள்ளது என்று அந்த ஏடு கூறியுள்ளது

அந்த வழிகாட்டி ஏட்டில், பதிலுரைப் பாடல் பாடப்படவேண்டும் என்றும், ஆயர்கள், அருள்பணியாளர்கள், மற்றும், திருத்தொண்டர்கள், மறையுரைகளை ஆற்றும் போது, விவிலிய நூல் பற்றி விசுவாசிகளுக்குப் புரியும் முறையிலும் அவற்றை ஆற்றவேண்டும் என்றும், அந்த ஏட்டில் கூறப்பட்டுள்ளது.

திருவழிபாட்டு நூல்களுக்குப் பதிலாக, அதன் துண்டுப் பிரதிகள், நகல்கள், மற்றும் ஏனைய பொருள்கள் பயன்படுத்தப்படக் கூடாது என்றும், இறைவார்த்தை ஞாயிறுக்கு முந்தைய நாள்களிலும், அதற்குப் பிறகும், பயிலரங்கள் நடத்தி, விசுவாசிகளுக்கு ஞாயிறு மற்றும், ஒவ்வொரு நாளைய திருப்பலி வாசகங்கள் பற்றி தெளிவுபடுத்தவேண்டும் என்றும், அந்த ஏடு பரிந்துரைத்துள்ளது

**4. தடுப்பூசி மருந்துகள் குறித்து வத்திக்கானின் 20 கருத்துகள்**

கோவிட்-19 கொள்ளைநோயின் பாதகமான விளைவுகளுக்கு தீர்வுகாணும் நோக்கத்துடன், திருத்தந்தையின் பரிந்துரையின் பேரில் உருவாக்கப்பட்டுள்ள வத்திக்கான் கோவிட்-19 கழகமும், பாப்பிறை வாழ்வு அறக்கட்டளையும் இணைந்து, இந்தக் கொள்ளைநோயைத் தடுக்கும் ஊசி மருந்துகள் குறித்து, 20 கருத்துக்கள் அடங்கிய ஓர் அறிக்கையை, டிசம்பர் 22, இச்செவ்வாயன்று வெளியிட்டுள்ளது.




# திருக்குடும்பத்தில் இணையட்டும் நம் குடும்பம்

தாயாம் திரு அவை இன்று திருக்குடும்ப பெருவிழாவைக் கொண்டாடி மகிழ நம்மை அழைக்கின்றது. ஒவ்வொரு குடும்பமும் ஒரு குட்டி திருஅவை என்பதை நாம் முழுமையாக நம்ப வேண்டும்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாசரேத்து திருக்குடும்பமாகிய யோசேப்பு, மரியா, குழந்தை இயேசுவை, முதல் தலைப்பேறான ஆண்குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கும் யூதச் சடங்கை நிறைவேற்றுமாறு, எருசலேம் ஆலயத்திற்கு வருகின்றார்கள். அங்கே வரப்போகும் மீட்பரைக் காணாமல் தாம் இறக்கமாட்டோம் என்று தூய ஆவியால் முன்னறிவிக்கப்பட்ட சிமியோனும். அன்னா என்னும் இறைவாக்கினரும் மீட்பரைக் காணும் பெரும்பேற்றைப் பெறுகின்றனர்.

குடும்பமே ஒரு சமூகத்தின் முதல் அடையாளம். குடும்பங்கள் ஒவ்வொன்றும் ஒன்றிணைந்து சமூகமாக, நாடாக, முழு உலகமாக விரிவடைகின்றது. நல்லதொரு குடும்பம் என்பது இறைபக்தி, கீழ்ப்படியும் அனைத்திற்கும் மேலாக அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தால் அதுவே இறைவனின் முன்னிலையில் திருக்குடும்பம். ஒவ்வொரு குடும்பத்திலும் இல்லத்தின் தலைவராக இருப்பவரின் தியாகமே பிள்ளைகளின் மேன்மைக்கும், குடும்ப ஒற்றுமைக்கும் அச்சாணியாகத் திகழ்கின்றது. குடும்பத்தில் தந்தையை மதிக்கும் பிள்ளைகள் நிறைசீரைப் பெற்றுக்கொள்வர் என்று விவிலியம் கூறுகின்றது. தந்தை, தாயை மதித்து, கீழ்ப்படிந்து நடப்பதென்பது இக்காலத்தில் சிறிது சிறிதாக குறைந்துகொண்டே வருகின்றது. ஆனால் இறைவனே மனிதனாக மனுவுருவெடுத்து வந்திருந்தாலும், தம் இறைத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வளர்ப்புத் தந்தையான யோசேப்புக்கும், அன்னை மரியாவுக்கும் கீழ்ப்படிந்திருந்தார் என்று வாசிக்கின்றோம்.

இன்றைய குடும்பங்கள் நவநாகரீகத்திலும், கணினி மயத்திலும் சிறந்து விளங்குவது மட்டுமே முக்கியம் என்று நினைத்து கொண்டு, குடும்பத்தின் அடிப்படைப் பண்புகளைக் கண்டுகொள்வதில்லை. பிள்ளைகளும் தாங்கள் வளர்ந்தபின்பு, பெற்றோருக்கு அறிவு குறைவு என்று அவர்களை மதிக்கத் தவறிவிடுகின்றனர். உலகைப் படைத்த இறைவன், தாம் படைத்த அனைத்திலும் மிகவும் மேன்மையானதென்று மனிதனைப் படைத்து முதல் குடும்பத்தை உருவாக்கினார். ஆகவே, குடும்பம் என்ற மிகப்பெரிய கொடையாகிய அமைப்பு, இந்தக் காலத்திற்கு ஒவ்வாதது என்று ஒரு நாளும் நாம் அதை உதாசீனப்படுத்தி சிதைத்துவிடக்கூடாது. ஒருகுடும்பம் திருகுடும்பமாக மாறவேண்டுமென்றால், முதலில் அன்பும், மன்னிப்பும் இருகண்களாக இருக்கவேண்டும். ஆண்டவரை எந்நாளும் துதிக்கும் குடும்பமாக திகழவேண்டும்.

தந்தைக்கு உரிய பணிகளையும் கடமைகளையும் செய்வதில் தந்தை தம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்திடவும், கீழ்ப்படிதலும், அன்பும் கொண்ட மனைவியால் நல்லதொரு குடும்பத்தை வழிநடத்தவும் முடியும். புனித யோசேப்பு இறைத்திட்டத்தை நிறைவேற்ற தமக்கிருந்த சொந்த திட்டங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளினார். மீட்புத்திட்டத்தில் தம்மையும் இணைத்துக்கொண்ட அன்னை மரியா கீழ்ப்படிதலை தமதாக்கிகொண்டார். இதுபோன்ற நற்பண்புகளைக் கொண்ட குடும்பமே இறைவன் விரும்பும் உண்மையான குடும்பம்.

நம் குடும்பங்கள் ஒவ்வொன்றையும் புனித யோசேப்பின் பரிந்துரையின் கீழ் ஒப்புக்கொடுப்போம். துன்பங்கள் சோதனைகள் மத்தியிலும், நம்பிக்கையோடு வாழும் குடும்பங்களுக்கு நிறைவான சீரும், வற்றாத வளமும் பெற்றுக்கொள்ளுமாறு திருக்குடும்பத்தை நோக்கி மன்றாடுவோம். இந்த நோய் அச்சுறுத்தல் அனைத்தும் நீங்கப்பெற்று குடும்பங்கள் ஒவ்வொன்றும் நலமோடும், வளமோடும், இறைப்பாதுகாப்போடும் வாழ்ந்திட, மகிழ்ந்திட மன்றாடுவோம்.

குறிப்பாக இந்த புனித யோசேப்பு ஆண்டில் திருக்குடும்பத்தின் உறுப்பினர்களில் ஒருவராகிய புனித யோசேப்பின் முன்மாதிரியைப் பின்பற்றி குடும்பத்தை வழிநடத்த முற்படுதல் சிறப்பு.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**திருக்குடும்பப் பெருவிழா**

தொ.நூ. 15: 1-6; 21: 1-3
திபா 105: 1-2. 3-4. 5-6. 8
எபி.11: 8, 11-12, 17-19
லூக்கா 2: 22-40

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : பெருவிழா**